முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1503

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

10.11.2023, வெள்ளிக்கிழமை

1. ஞானச்சுடரே அரங்கா வாழ்க
ஞானபண்டிதன் என் சக்தியாக வந்த
ஞானதேசிகனே வாழ்கவாழ்க
ஞாலமதில் உந்தனுக்கு சுப்ரமண்யர் யானும்
2. யானுமே ஞான அறிவுரை ஆசி
உரைத்திடுவேன் சோபகிருது துலைதிங்கள்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 24 ம் நாள், 10.11.2023, வெள்ளிக்கிழமை)
சிந்தைபட அரங்கன் சன்மார்க்கம்
சித்திமிகு ஞானமார்க்கமாக இருக்க
3. விந்தைபட உலகோர் ஏற்றுவந்தால் போதும்
விரைந்து உலகோர்க்கு ஞான சித்தி
சித்திதனை ஆறுமுகன் யான்
சித்தமாக அருளி இந்த உலகமெல்லாம்
4. சக்திமிகுந்த ஞானவான்கள் படையை
சற்குரு அரங்கன் வழி யானே நிறுவி
நிறுவியே உலகமெங்கும் ஞான யுகமாற்றம்
உயர்வாக ஆறுமுகன் யான் நடத்தி அருள்வேன்
5. சிந்தைவைத்து அரங்கன் திருவடி பற்றி
சீடர்களென உலகோர் அடையாளம் கண்டுவிட
எந்தவித தடையுமின்றி அவர்கட்கெல்லாம்
இனிதே ஆறுமுகன் யான் சக்தியாக நிரம்பி
6. நிரம்பியே சர்வபாதுகாப்புத் தருவேன்
நிலவுலகில் ஞான ஆட்சி மலர
எந்தவித தடையுமின்றி அற்புதத்தை
இலகுவாய் ஆறுமுகன் யான் நடத்தி காப்பேன்

7. காக்கவே அரங்கன் ஞானமேற்று
கலியுகத்தார் முழு சரணாகதி கொண்டு
ஒப்புகொண்டு ஓங்காரக்குடில் நோக்கி
ஒன்றிணைந்து செயல்பாடு கண்டால் போதும்

8. போதுமப்பா உலகமாற்றம் நடந்தேறும்
புண்ணியவான்கள் ஞான ஆட்சிக்காலமாக
உலகமெல்லாம் அரங்கேறி இனிதே
ஓங்கார ஞான ஆட்சி மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–